**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்</u>.**

முன்னிலை: செல்வி.E.ரிதுலா, B.A., L.L.B.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேந்தமங்கலம்.

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ம் நாள், புதன்கிழமை

**<u>இ.ம.எண்.10/2025 இன் அ.வ.எண்.267/2020</u>**

(நாமக்கல், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.346/2017)

1. ராஜா
2. ரேவதி .... மனுதாரர்கள்/புரபோஸ்டுபார்ட்டிகள்

/எதிராக/

1. K. முருகேசன் ......1–ம் எதிர்மனுதாரர்/வாதி
2. கண்காணிப்பு பொறியாளர்
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நாமக்கல்
3. உதவி செயற்பொறியாளர் (இ/பே),
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், எருமப்பட்டி
4. இளமின் பொறியாளர்
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
   அண்ணாநகர், நாமக்கல் தெற்கு
5. பானுமதி ......2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/
   1 முதல் 4 பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு 12.01.2026–ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர்கள்/புரபோஸ்டுபார்ட்டிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.ராஜகோபால், அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.V.ரகு அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4–ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.G.இளையரசன் அவர்கள் ஆஜராகியும் உள்ளனர். 5–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.ராஜகோபால், அவர்கள் ஆஜராகியும் உள்ளனர். மனு, பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10–ன் கீழ் தாக்கல் செய்து, மனுவில் சொல்லப்பட்டுள்ள புரபோஸ்டு பார்ட்டிகளை அசல் வழக்கில் 5, 6–ம் பிரதிவாதிகளாக சேர்க்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/புரபோஸ்டு பார்ட்டிகள் தரப்பு மனு, பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம்:**

மனுதாரர்கள்/புரபோஸ்டுபார்ட்டிகள் தங்களது மனுவில், வாதி, பிரதிவாதிகள் பேரில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் தாவா 4–ம் பிரதிவாதி பானுமதியின் மக்கள் ஆவார்கள். வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட கிணற்றில் 4–ம் பிரதிவாதிக்கும், மனுதாரர்களுக்கும், பூர்வீகமாகவும், லேட்.மருதபிள்ளையின் வாரிசுகள் என்ற அடிப்படையிலும் பொதுவாக பாத்தியப்பட்டு மனுதாரர்களும், 4–ம் பிரதிவாதியும் பொதுவாகவும், கூட்டாகவும் நாளது வரை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இந்நிலையில் மேற்படி வழக்கு விபரம் மனுதாரர்களுக்கு தற்சமயம் தான் தெரிய வந்தது. அதனால் மனுதாரர்களை தாவாவில் அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டி உள்ளது. ஆகையால் மேற்படி நெம்பர் வழக்கில் மனுவில் கண்ட புரபோஸ்டுபார்ட்டிகளான மனுதாரர்களை மேற்படி நெம்பர் தாவாவில் 5, 6–ம் பிரதிவாதிகளாக சேர்க்க உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, இம்மனுவை அனுமதிக்க வேண்டியுள்ளனர்.

3. 1**–ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்:**

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து, 1–ம் எதிர்மனுதாரர்/வாதி தனது பதிலுரையை தாக்கல் செய்துள்ளார். அதில், மனுதாரர்களுக்கு மனுவில் சொல்லியுள்ள படி, மேற்படி கிணற்றில் யாதொரு உரிமையும் இல்லை. 5–ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் தாங்கள் தான்

என்பதற்கோ, தாவா சொத்து சம்மந்தப்பட்ட கிணற்றில் 5–ம் எதிர்மனுதாரருக்கும், மனுதாரர்களுக்கும் பூர்வீகமாகவும் லேட்.மருத பிள்ளையின் வாரிசுகள் என்ற அடிப்படையிலும் பொதுவாக பாத்தியப்பட்டு மனுதாரர்களும், 5–ம் எதிர்மனுதாரர்/4–ம் பிரதிவாதியும் நாளது வரை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதற்கோ மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவுடன் யாதொரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் 5–ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் மூலமாக தான் தாக்கல் செய்துள்ளார். எனவே, 5–ம் எதிர்மனுதாரரும், மனுதாரர்களும் ஒன்றாக ஒரே வீட்டில் வசித்து வந்து மேற்படி வழக்கு விபரம் மனுதாரர்களுக்கு தற்போது தான் தெரிய வந்தது என்று வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளனர். தாவாவை விரைந்து முடிக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலும் 5–ம் எதிர்மனுதாரின் தூண்டுதலின் பேரில் இது போன்ற இடைக்கால மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு வாதியை அலைக்களிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி தாவாவிற்கு மனுதாரர்கள் எவ்வகையில் அவசிய தரப்பினர்கள் என்று அபிடவிட்டில் தெளிவாக கூறவில்லை. எனவே, இவ்வெதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக் கோரியுள்ளார்.

**4.** 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் "No Counter" என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**5.** இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காணப்படவேண்டியுள்ளது.

**6.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**7.** மனு, பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

**7.1)** இவ்வழக்கு கோப்புகளை இந்த நீதிமன்றம் பரிசீலித்ததில், 1–ம் எதிர்மனுதாரர்/வாதி, தாவா சொத்துக்கு வாதி பெயரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் பூந்தோட்டம் மின் இணைப்பு வழங்க 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது, செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, மேற்படி அசல் வழக்கை தாக்கல் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கானது தற்போது வா.சா.1–னின் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர்கள்/புரபோஸ்டுபார்ட்டிகள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10–ன் கீழ் இந்த இடைநிலை மனுவை தாக்கல் செய்து, அசல் வழக்கில் மனுதாரர்களை 5, 6–ம் பிரதிவாதிகளாக சேர்க்கக் வேண்டியுள்ளனர். எனவே, இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காண வேண்டியதாகும்.

**7.2)** மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள், தாவாவில் 4–ம் பிரதிவாதியான பானுமதியின் மக்கள் ஆவார்கள் என்றும், வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட கிணற்றில் 4–ம் பிரதிவாதிக்கும், மனுதாரர்களுக்கும், பூர்வீகமாகவும், லேட்.மருதபிள்ளையின் வாரிசுகள் என்ற அடிப்படையிலும் பொதுவாக பாத்தியப்பட்டு மனுதாரர்களும், 4–ம் பிரதிவாதியும் கூட்டாக நாளது வரை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள் என்றும், இந்நிலையில் மேற்படி வழக்கு விபரம் மனுதாரர்களுக்கு தற்சமயம் தான் தெரிய வந்தது என்றும், அதனால் மனுதாரர்களை தாவாவில் அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டி உள்ளது என்றும், எனவே, இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிடப்பட்டது. ஆனால் 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள படி, மனுதாரர்களுக்கு மேற்படி கிணற்றில் யாதொரு உரிமையும் இல்லை என்றும், 5–ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் தாங்கள் தான் என்பதற்கோ, தாவா சொத்து சம்மந்தப்பட்ட கிணற்றில் தங்களுக்கு பொதுவாக பங்கு உள்ளது என்பதற்கோ இம்மனுவுடன் யாதொரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 5–ம் எதிர்மனுதாரரும், மனுதாரர்களும் ஒன்றாக ஒரே வீட்டில் வசித்து வந்து மேற்படி வழக்கு விபரம் மனுதாரர்களுக்கு தற்போது தான் தெரிய வந்தது என்று

வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளனர் என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிடப்பட்டது.

**7.3)** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வாதி மேற்படி அசல் வழக்கில், 3–ம் பிரதிவாதியிடம் கடந்த 05.12.2016–ம் தேதியன்று தாவா கிணற்றில் வாதி பெயரில் பூந்தோட்ட மின் இணைப்பு வழங்குமாறு மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், பின்பு 4–ம் பிரதிவாதி வாதிக்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என கடிதம் கொடுத்துள்ளார் என்றும், வாதி 3 பிரதிவாதியை பலமுறை அணுகியும், மின் இணைப்பு வழங்காததால், வாதி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டுமே செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார் என்று அறிய முடிகிறது. மேலும், மேற்படி வழக்கில் 4–ம் பிரதிவாதியான பானுமதிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் வாதி கோராமல் Proforma Defendant என்ற அடிப்படையில் மட்டும் 4–ம் பிரதிவாதியை மேற்படி அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்று இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. மேலும், எதிர்மனுதாரர்கள் எடுத்துரைத்தது போல் மனுதாரர்கள் லேட்.மருதபிள்ளை, மற்றும் 4–ம் பிரதிவாதியான பானுமதி ஆகியோரின் வாரிசுகள் என்பதற்கான எவ்வித ஆவணங்களும் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர்களும், அவரது தாயாரான 4–ம் பிரதிவாதியும் கூட்டாக மேற்படி தாவா கிணற்றை உபயோகித்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ள நிலையில், மேற்படி வழக்கின் விவரங்கள் தற்போது தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்று மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் ஏற்புடையதாக இல்லையென்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், 4–ம் பிரதிவாதிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோராததாலும், Proforma Defendant என்ற அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளதாலும் இந்த உத்தேச தரப்பினர்கள் இந்த வழக்கின் அவசிய தரப்பினர்கள் இல்லையென்று இந்த நீதிமன்றம் கருதுவதால் நீதியின் நலன் கருதி, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

**8. முடிவாக,**

i) இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

ii) செலவு தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 28–ம் நாள் ஜனவரி மாதம் 2026–ம் வருடம் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

RIDHULA E

Digitally signed by RIDHULA E
Date: 2026.01.29 04:00:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேந்தமங்கலம்.

**<u>மனுதாரர்கள்/புரபோஸ்டுபார்ட்டிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள்/ வாதி/ பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

இல்லை

RIDHULA E

Digitally signed by RIDHULA E
Date: 2026.01.29 04:01:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேந்தமங்கலம்.

**உத்தரவு**

இ.ம.எண்.10/2025 இன்
அ.வ.எண்.267/2020
நாள்.28.01.2026.